

# சீரான போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு

## புதிய கோணம்

ஒரு காவல் நிலையத்திற்கு சராசரியாக ஒரு நாளைக்கு வருபவர்களுடைய எண்ணிக்கை, அது சிறிய காவல் நிலையமாக இருந்தால் இருபதிலிருந்து முப்பது நபர்கள், அதே நேரத்தில் பெரிய காவல் நிலையமாக இருந்தால், குறிப்பாக நகரங்களில் இருக்கக்கூடிய காவல் நிலையங்களில் ஐம்பதிலிருந்து நூறு நபர்கள் பல்வேறு பிரச்சனைகளுக்காகவும் சேவைத் தேவைகளுக்காகவும் வந்து செல்கின்றனர்.

உதாரணமாக அவர்கள் எல்லோருடைய பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டாலும் கூட ஒரு நாளைக்கு அதிகபட்சம் 100 பேரின் நன்மதிப்பைத் தான் காவல்துறை பெற முடியும். அதே நேரத்தில் போக்குவரத்து சீர் செய்வதில் காவல்துறைக்கு உள்ள பணியை செவ்வனவே செய்யும்போது, அது ஆயிரக்கணக்கான மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஒரு நல்ல பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கும். அதன் மூலம் பொதுமக்களின் நன்மதிப்பைக் காவல்துறை எளிதாகப் பெற முடியும். போக்குவரத்து சீராக செல்வதன் மூலம் சாலையில் பயணிப்பவர்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்வதற்கும், தங்களுடைய அன்றாட செயல்களை சரியாக திட்ட மிடுவதற்கும், மன அழுத்தமின்றி பயணம் செய்வதற்கும், பாதுகாப்பாக பயணம் செய்வதற்கும் உகந்ததாக இருக்கும்.

சாலையில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் மூலம்




www.kavalarvoice.in

2



வே.பாலகிருஷ்ணன், இ.கா.ப





சிக்னல்கள் இருந்த இடமெல்லாம் புதியதாக 'U' Turn System அமைக்கப் பட்டதன் விளைவாக பல்வேறு பலன்கள் கிடைத்திருக்கின்றன.

உயிரிழப்பவர்களும், காயம்படுவோர்களின் எண்ணிக்கையும் சேர்த்தால், அது மற்ற குற்றங்களில் பாதிப்படையக்கூடிய மக்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கின்றது. ஒவ்வொரு முறை ஒரு விபத்து நடக்கும் போதும், ஒரு தனிப்பட்ட நபர் மட்டுமின்றி ஒரு குடும்பம் சீரளிகின்றது. அந்த குடும்பத்தை சார்ந்திருக்கக்கூடிய சுற்றமும் சுற்றுப்புற மக்களும் பாதிப்புக்குள்ளாகின்றனர். ஆக விபத்துக்களை தடுப்பதிற்கு முறையான காவல் பணி – போக்குவரத்து பணி இன்றியமையாததாகும். விபத்துக்களைத் தடுக்க போக்குவரத்து சீரமைப்பு அவசியமானது.

போக்குவரத்து சீர் செய்யக்கூடிய காவல்துறையின் கடமை, கிராமங்களில் உள்ள காவல் நிலையங்களை விட நகரங்களில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. நகரங்களில் போக்குவரத்து காவல் நிலையங்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தாலும் வளர்ந்து வரக்கூடிய மக்கள் தொகை, நகரின் விரிவாக்கம் ஆகியவற்றை கணக்கிடும்போது இன்னும் போக்குவரத்து காவல்துறையுடைய நீட்டம் அதிகம் தேவை என்று தோன்றுகின்றது. ஆனால் அது உடனடியாக நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு. ஆகவே, ஒரு பக்கம் காவல் துறையினருடைய எண்ணிக்கை மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகப்படுத்தக்கூடிய தேவை என்ற எண்ணம் இருந்தாலும், இன்னொரு பக்கம் போக்குவரத்தை பொறுத்தவரைக்கும் நவீன தொழில்நுட்பங்களையும், புதிய புதிய யுத்திகளையும் கொண்டு வந்து அதன் மூலம் போக்குவரத்தை சீர்படுத்துவதும் முக்கியம்.

போக்குவரத்தை சீர்படுத்துவதில் காவல் துறையின் பணிக்கு உதவியாக இருக்கக்கூடிய மற்ற துறைகள் சாலைகளை பராமரிக்கக் கூடிய அரசு துறைகள், போக்குவரத்து காவலர்கள் செய்யக்கூடிய பணியை போன்று பணி செய்யக்கூடிய சாலைப் போக்குவரத்துத் துறையினர் போன்றவர்கள் இணைந்து செயல்படும் போது ஒரு நகரில் போக்குவரத்தை முறையாக சீரமைப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். புதிய யுக்திகள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

கோவை மாநகரை பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்தபடியாக மக்கள் தொகையிலும், வளர்ச்சியிலும் இரண்டாம் இடத்தில் இருக்கின்றது. 25 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையோடு கோவை மாநகரத்தில், ஒரு வருடத்திற்கு சுமார் ஒரு லட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அதற்கேற்ற சாலைகள் தேவை என்றாலும் குறுகிய காலத்தில் அந்த நீட்டம் அடைவதற்கான வாய்ப்புகள் குறைவு. ஆகவே மக்கள் தொகையும் வாகனங்களின் எண்ணிக்கையும் சாலைகளின் பெருக்கமும் சமமாக ஆகும் வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலத்தில் புதிய உக்திகள் மூலம் போக்குவரத்து சீரமைப்பு செய்வது அவசியம். கோவை மாநகரில் சுமார் 60 சாலை போக்குவரத்து சிக்னல்கள் இயங்கி வந்தன. மிக முக்கியமான பெயருடைய பல சிக்னல்கள் இருந்தன. அந்த சிக்னல்களில் போக்குவரத்து பல நிமிடங்கள், குறிப்பாக காலை மற்றும் மாலை போன்ற மக்கள் அதிகமாக செல்லக்கூடிய நேரங்களில் இன்னும் அதிகமான நேரம் எடுத்து மக்கள் நகர வேண்டிய ஒரு சூழல் இருந்து வந்தது.

இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக பல்வேறு யோசனைகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும், ஏற்கனவே கூறியது போல போக்குவரத்து சீரமைப்பில் தொடர்புடைய பல்வேறு துறைகளினுடைய மொத்த அனுபவத்தையும் அந்தந்த துறையில் இருக்கக்கூடிய தொழில்நுட்பங்களையும் ஒருங்கிணைத்து ஜங்ஷன் மேனேஜ்மென்ட் (Junction Manage-ment)) என்பதற்கு சிக்னல்கள் இல்லாமல் சாத்தியமா என யோசனை செய்தபோது, உதித்த ஒரு திட்டம்தான் ‘U” Turn மற்றும் ‘Round About”என்பது. இதில் சாலை பாதுகாப்பு பொறியாளர்களும், காவல் அதிகாரிகளும் ஒருங்கிணைந்து தங்களுடைய அனுபவங்களின் அடிப்படையிலும் மக்களின் தேவைகளின் அடிப்படையிலும் எப்படி புதிய முறையில் போக்குவரத்தை சரிசெய்யலாம் என்று யோசனை செய்தபோது உதித்தது தான் ‘U Turn System” ஆகும். முதலில் ஒரு சோதனை அடிப்படையில் ஒரு சில இடங்களில் புதிய முயற்சி அமல்படுத்தி பார்க்கலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் கோவையின் மேற்கு பகுதியை கிழக்கு பகுதியோடு இணைக்கும் ‘லாலி ரோடு ஜங்ஷன்” என்ற ஒரு இடத்தில் காலை மாலை நேரங்களில் வேலைக்கு சென்று வரக்கூடிய மக்கள் நூற்றுக்கணக் கானோர் பல நிமிடங்கள் நின்று பயணிக்க வேண்டிய ஒரு சூழல் இருந்த நிலையில் ‘Round About system” அறிமுகப்படுத்தப்பட்டது.

சிக்னல்கள் இருந்த இடமெல்லாம் புதியதாக ‘U’ Turn System அமைக்கப் பட்டதன் விளைவாக பல்வேறு பலன்கள் கிடைத்திருக்கின்றன.

1) சிக்னல்கள் சந்திப்பில் பொதுவாக வாகன ஓட்டுனர்களின் நடத்தை, மனநிலை எப்படி இருக்கும் என்றால், கீரின் சிக்னல் ஒளிர்ந்த உடனே எவ்வளவு வேகமாக வாகனத்தை இயக்கி வாகனமில்லாமல் இருக்கக் கூடிய சாலையை சாதகமாக்கிக் கொள்ள முடியுமோ அதை செய்வதற்கு முயற்சி செய்வார்கள், இதனால் சிக்னல் தாண்டியவுடன் சாலையில் அதிவேகமாக வாகனங்களை இயக்கும் போது விபத்துக்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

2) சிக்னல்களில் மக்கள் வாகனத்தில் காத்திருக்கும்போது என்னதான் கவுண்டவுன் Display இருந்தாலும் தங்களுடைய வாகனங்களை இயக்கத்தில் தான் வைத்துள்ளனர், இதனால் எரிபொருள் செலவு அதிகமாகிறது.

3) அதேபோல் சிக்னல்களில் அதிக நேரம் காத்திருக்கும்போது மன அழுத்தமும், ரத்த அழுத்தமும் அதிகமாக இருக்கிறது. அதை பல சந்தர்ப்பங்களில் நாம் பார்த்திருக்கின்றோம். சிக்னல்களில் காத்திருக்கும்போது மக்களின் அவசரத்தினால் படபடப்பு வருகிறது.

4) இதேபோல பல பிரச்சனைகள் இந்த சிக்னல்களில் இருக்கின்றன. அவை தவிர்க்க முடியாதவை.

ஆனால், கோவை மாநகரில் ‘U Turn System” அறிமுகப்படுத்திய பிறகு சிக்னல்களில் வாகனங்கள் நிற்க வேண்டிய அவசியம் ஏற்படாமல், தொடர்ந்து நகர்ந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றி பொதுமக்களிடன் கருத்து கேட்டறிந்தபோது (Feedback) பெருவாரியான பேருக்கு வழக்கமாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கான எரிபொருளுடைய தேவை அளவு குறைந்துள்ளதும், விபத்துக்கள் குறைந்துள்ளதும், மக்களின் காத்திருக்கும் நேர அளவும் குறைந்துள்ளதும் தெரிய வருகிறது. விமான நிலையம், இரயில் நிலையம், பேருந்து நிலையம் போன்ற இடங் களுக்கு செல்வது எளிதாகி உள்ளது. மிக முக்கியமாக ஆம்புலன்ஸ்களின் சராசரி பயண நேரம் வெகுவாகக் குறைந்துள்ளது. இது போன்ற பல பயன்கள் இருந்தாலும் மக்களின் கருத்துக்களைத் தொடர்ந்து தெரிந்து கொண்டு அதற்கேற்ற மாற்றம் கொண்டு வர “QR” கோடு மூலமாகக் கருத்துக்களை தெரிந்து கொண்டு அதற்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் ‘U’ turn அறிமுகப் படுத்தப்பட்டுள்ள சாலைகளில் பாதசாரிகள் சாலைகளைக் கடக்க வெளிநாடுகளில் உள்ளது போல் பாதசாரிகளால் இயக்கப்படும் சிக்னல்களை உருவாக்கி உள்ளோம். ஆக, இந்தப் புதிய முயற்சியின் மூலம் பல்வேறு சாதகமான சூழல் கோவை மாநகரக் காவல் துறையில் ஏற்பட்டுள்ளது. மக்களின் நன்மதிப்பும் வெகுவாக உயர்ந்துள்ளது.‘U’ turn அமைக்கும் இடத்தைத் தேர்வு செய்யும் போது சாலையின் அகலம், சுற்றுவட்ட ஆரம் (Turning radius) – குறிப்பாக நீண்ட வாகனங்கள் திரும்புவதற்கு போதுமான இடம் ஆகியவைகளை மனதில் கொள்வது அவசியம். ஆரம்பத்தில் ‘U’ turn முறையை மக்கள் முழுமையாக புரிந்து கொண்டு கடைபிடிக்கும் வரை போக்குவரத்துக் காவலர்களின் பணி மிகவும் முக்கியமானது.

தொடரும்...